Dhinathdhalam@gmail.com

www.dhinathdhalam.com

**விளம்பரதாரர்கள் தேவை**

தமிழகம் முழுவதும் 234 சட்டமன்ற தொகுதிகளுக்கும் செய்தி – விளம்பரம் சேகரிக்க முழு நேர – பகுதி நேர பணிக்கு தகுந்த ஆட்கள் தேவை.

☎ 9 111 222 654

# தினத்தளம்

PRGI NO: TNBIL/25/A3556 நடுநிலை நாளிதழ் ISO : 9001:2015; QT-57977/1125

DHINATH DHALAM Tamil & English daily Paper

நிர்வாக ஆசிரியர் : முனைவர். எஸ்.மோகன்ராஜ் M.A.,PGDJMC.,Ph.D., ஆசிரியர் : முனைவர். எம்.ஹரிகிருஷ்ணன் B.A.,

மலர் Volume : 01 • இதழ் Issue : 89 • வெள்ளிக்கிழமை Friday • 30.01.2026 • பக்கங்கள் Pages:4 • ₹ 6 • ஈரோடு Erode

**செய்தியாளர்கள் தேவை**



தமிழகம் முழுவதும் மாவட்டம் & தாலுகா வாரியாக சந்தாதாரர் அடிப்படையில் ஆண்/பெண் நிருபர்கள் தேவை

☎ 94440 82959

# கல்வி மாநாட்டில் 8 புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் கையெழுத்து

## முதலமைச்சர் ஸ்டாலின் முன்னிலையில் விருப்பக் கடிதங்கள் கையெழுதிடப்பட்டன




இந்தியா உலகளாவிய கல்வி மாநாட்டில் தமிழ்நாடு அறிவுசார் நகரத்திற்கு அடிக்கல் நாட்டி, பல்வேறு நாடுகளின் பல்கலைக்கழகங்கள் மற்றும் கல்வி நிறுவனங்களுடன் முதல்வர் ஸ்டாலின் முன்னிலையில் புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் மற்றும் விருப்பக் கடிதங்கள் கையெழுதிடப்பட்டன. முதல்வர் மு.க.ஸ்டாலின் (ஜன.29) சென்னை, கலைவாணர் அரங்கத்தில், "இந்தியா உலகளாவிய கல்வி மாநாடு 2026" (India Global Education Summit 2026) தொடக்க விழாவில் 'தமிழ்நாடு அறிவுசார் நகரம்' (The Tamil Nadu Knowledge City) திட்டத்திற்கு அடிக்கல் நாட்டினார்.

மேலும்,அறிவு,புதுமை மற்றும் திறன் மேம்பாட்டின் உலகளாவிய மையமாக தமிழ்நாட்டினை வலுப்படுத்தும் விதமாக பல்வேறு நாடுகளின் பல்கலைக்கழகங்கள் மற்றும் கல்வி நிறுவனங்களுடன் முதல்வர் முன்னிலையில் புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் மற்றும் விருப்பக் கடிதங்கள் (Letter of Intent) கையெழுத்திடப்பட்டன.

தமிழ்நாடு அறிவுசார் நகரம் அடிக்கல் நாட்டுதல் திருவள்ளூர் மாவட்டம், ஊத்துக்கோட்டை வட்டம், செங்காத்துகுளம், மேல்மளிகைப்பட்டு மற்றும் இனாம்பாக்கம் கிராமத்தில் 872 ஏக்கர் பரப்பில் அமைக்கப்படவுள்ள தமிழ்நாடு அறிவுசார் நகரத்திற்கு முதல்வர் ஸ்டாலின் அடிக்கல் நாட்டினார்.

உயர்கல்வி, ஆராய்ச்சி மற்றும் மேம்பாடு, தொழில்நுட்பம் மற்றும் தொழில்முனைவு ஆகியவற்றை ஒருங்கிணைத்து, அறிவுசார்ந்த ஒரு சூழலை உருவாக்கி, தமிழ்நாட்டை அறிவுசார் சிறப்பிற்கான உலகளாவிய மையமாக நிலைநிறுத்துவதை நோக்கமாக கொண்டு தமிழ்நாடு அறிவுசார் நகரம் அமைக்கப்படவுள்ளது.

இந்நகரம், தனித்தனி நிறுவனங்களின் தொகுப்பாக இல்லாமல், கல்வி, ஆராய்ச்சி மற்றும் தொழில் நிறுவனங்கள் தடையின்றி ஒன்றிணையும் ஒரு ஒருங்கிணைந்த நிலப்பரப்பாக இருக்கும். வரும் ஆண்டுகளில், உலகத்தரம் வாய்ந்த ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டு மையங்கள் மற்றும் புத்தாக்கக் குழுக்களுடன் இணைந்து 25,000-க்கும் மேற்பட்ட கற்பவர்களை இது உருவாக்கும்.

விருப்பக் கடிதங்கள் (Letter of Intent) கையெழுத்திடப்பட்டன.

மெல்போர்ன் பல்கலைக்கழகம் - குவாண்டம் கணினி மற்றும் வேளாண் தொழில்நுட்ப துறைகளில் பயன்பாட்டு ஆராய்ச்சி மையத்தை 20,000 சதுர அடியில் 35 கோடி ரூபாய் முதலீட்டில் ஐந்து ஆண்டுகளில் Knowledge Corridor-ஐ நிறுவிட விருப்பக் கடிதம் கையெழுத்திடப்பட்டன. இதன்மூலம் 25 நபர்களுக்கு நேரடி வேலைவாய்ப்புகளும், 200 நபர்களுக்கு மறைமுக வேலைவாய்ப்புகளும் கிடைக்கும்.

ஐஐடி சென்னை - மேம்பட்ட ஆட்டோமொட்டிவ் ஆராய்ச்சி மையம், மின்சார வாகனங்களுக்கான மாற்று ஆராய்ச்சி மையம் மற்றும் சோதனை ஆய்வகத்தை 40,000 சதுர அடியில் 200 கோடி ரூபாய் முதலீட்டில் Knowledge Tower-ல் நிறுவிட விருப்பக்கடிதம் கையெழுத்திடப்பட்டன. இதன்மூலம் 100 நபர்களுக்கு நேரடி வேலைவாய்ப்புகளும், 2,000 நபர்களுக்கு மறைமுக வேலைவாய்ப்புகளும் கிடைக்கும்.

ஐஐடி சென்னை குளோபல் 20,000 சதுர அடியில் அடிப்படை மற்றும் பயன்பாட்டு ஆராய்ச்சி திறன் வசதி மையத்தை மேம்பட்ட திறன் மற்றும் புதுமையை முன்னெடுக்கும் வகையில் நிறுவிட விருப்பக் கடிதம் கையெழுத்திடப்பட்டன.

ஆர்க்ஸீ, கார்பன் பிடிப்பு மற்றும் நிலைத்தன்மை துறையில் 10,000 சதுர அடியில் ஆராய்ச்சி ஆய்வகத்தை நிறுவிட விருப்பக் கடிதம் கையெழுத்திடப்பட்டன.

அக்யூமென், TIDCO உடன் இணைந்து 120 கோடி ரூபாய் முதலீட்டில் Knowledge City-யை மேம்படுத்தும் நோக்கில் கூட்டாண்மை திட்டங்களை செயல்படுத்த விருப்பக் கடிதம் கையெழுத்திடப்பட்டன. இதன்மூலம் 150 நபர்களுக்கு நேரடி வேலைவாய்ப்புகளும், 2,500 நபர்களுக்கு மறைமுக வேலைவாய்ப்புகளும் கிடைக்கும்.

புரிந்துணர்வு ஒப்பந்தங்கள்

தமிழ்நாடு தொழில் வழிகாட்டி நிறுவனம் (Guidance Tamil Nadu) உலகின் முன்னணி கல்வி நிறுவனங்களுடன் புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் முதல்வர் ஸ்டாலின் முன்னிலையில் மேற்கொள்ளப்பட்டன.

இந்த இந்தியா உலகளாவிய கல்வி மாநாட்டில், 5 விருப்பக் கடிதங்கள் (Letter of Intent) கையெழுத்திடப்பட்டு, 8 புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் மேற்கொள்ளப்பட்டு, மொத்தம் ரூ. 355 கோடி ரூபாய் முதலீட்டு மதிப்புடன், 2,255 நபர்களுக்கு நேரடி வேலைவாய்ப்புகளும், 9,650 நபர்களுக்கு மறைமுக வேலைவாய்ப்புகளும் கிடைக்கும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

# ஓ. பன்னீர் செல்வத்தை அ.தி.மு.க.வில் சேர்ப்பதற்கு வாய்ப்பே இல்லை

## பொதுச்செயலாளர் எடப்பாடி பழனிசாமி அறிவிப்பு



முன்னாள் முதல்வர் ஓ. பன்னீர் செல்வத்தை சேர்ப்பதற்கு வாய்ப்பே இல்லை எனவும் இது தனிப்பட்ட முடிவல்ல, பொதுக்குழுவின் முடிவு என்றும் அதிமுக பொதுச்செயலாளர் எடப்பாடி பழனிசாமி தெரிவித்துள்ளார்.

சேலம் மாவட்டம் ஓமலூரில் மாற்றுக் கட்சியைச் சேர்ந்தவர்கள் அதிமுகவில் இணையும் நிகழ்ச்சி அந்தக் கட்சியின் பொதுச்செயலாளர் எடப்பாடி பழனிசாமி முன்னிலையில் இன்று(ஜன. 29) நடைபெற்றது.

இந்த நிகழ்ச்சியில் பங்கேற்ற இபிஎஸ், பின்னர் செய்தியாளர்களைச் சந்தித்தார். அப்போது அவர் பேசுகையில், "அதிமுக பொதுக்குழுக் கூட்டத்தில் ஏகமனதாக முடிவு எடுக்கப்பட்டு, ஓ. பன்னீர் செல்வம் அதிமுகவின் அடிப்படை உறுப்பினர் பதவியில் இருந்து நீக்கப்பட்டுவிட்டார்.

நடவடிக்கை எடுக்கப்பட்டுவிட்டது. அதனால் அதிமுகவில் அவரை சேர்ப்பதற்கு வாய்ப்பே இல்லை. இது பொதுச் செயலாளர் எடுத்த முடிவல்ல, 2500 பொதுக்குழு உறுப்பினர்கள் சென்னையில் நடந்த கூட்டத்தில் அவர் செய்த துரோகத்திற்காக எடுக்கப்பட்ட நடவடிக்கை.

அதிமுகதான் ஆட்சி அமைக்கும். தேமுதிகவுடன் பேச்சுவார்த்தை இன்னும் தொடங்கப்படவில்லை. திமுக ஆட்சியில் நாள்தோறும் பாலியல் சீண்டல் சம்பவங்கள் நடைபெற்று வருகின்றன.

அனைத்துக் கட்சிகளுடனும் பேச்சுவார்த்தை நடத்தியவுடன் தொகுதிப்பங்கீடு குறித்து ஆலோசிக்கப்படும். 210 தொகுதிகளில் எங்கள் கூட்டணி வெற்றிப்பெறும்" என்றார்.

"எப்போது பார்த்தாலும் பழனிசாமி கால்களையே பார்க்கிறார் என முதல்வர் கூறுகிறாரே" என்ற கேள்விக்குப் பதிலளித்த இபிஎஸ், "கால்களை பார்த்தால்தான் சரியான பாதையில் நடக்க முடியும். உங்களை போன்று கை பிடிக்கல, மரியாதை கொடுத்தால் மரியாதை கிடைக்கும். இல்லையென்றால் எங்களுக்கும் பேசத்தெரியும்" என்றார்.

# வாக்காளர் பட்டியலில் பெயர் சேர்க்க மேலும் 10 நாள்கள் அவகாசம்



தமிழகத்தில் வாக்காளர் பட்டியலில் விடுபட்டவர்கள் பெயரை சேர்க்க மேலும் 10 நாள்கள் அவகாசம் வழங்க தேர்தல் ஆணையத்திற்கு உச்சநீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

திமுக சார்பில் உச்ச நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்ட மனு மீது இந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

தமிழ்நாட்டில் வாக்காளர் பட்டியல் சிறப்பு தீவிர திருத்தம் (எஸ்ஐஆர்) கடந்த நவம்பர் 4 ஆம் தேதி தொடங்கி நடைபெற்று வருகிறது.

வாக்குச்சாவடி அலுவலர்களால் விநியோகம் செய்யப்பட்ட படிவங்கள் அனைத்தும் பெறப்பட்ட நிலையில் கடந்த டிச. 19 ஆம் தேதி வரைவு வாக்காளர் பட்டியல் வெளியானது. வரைவு வாக்காளர் பட்டியலில், தமிழகத்தில் 97.38 லட்சம் வாக்காளாகள் நீக்கப்பட்டனா. இதனால் 6,41,14,587-ஆக இருந்த தமிழக மொத்த வாக்காளாகள் எண்ணிக்கை 5,43,76,756-ஆகக் குறைந்தது.

வரைவு வாக்காளா பட்டியலில் பெயாகள் நீக்கப்பட்டவாகள் பெயா சோக்கவும், 18 வயது பூாத்தி செய்தவாகள் புதிதாக பெயா சோக்கவும் கடந்த டிச.19 முதல் ஜன.18 வரை அவகாசம் அளிக்கப்பட்டது. பின்னர் ஜன. 30 வரை இந்த கால அவகாசம் நீட்டிக்கப்பட்ட நிலையில் தற்போது மேலும் 10 நாள்கள் அவகாசம் வழங்கப்பட்டுள்ளது.

வாக்காளர் பட்டியலில் பெயரை சேர்க்க மேலும் அவகாசம் வழங்கக் கோரி திமுக சார்பில் உச்ச நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்ட மனு மீது இந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

அதாவது, வாக்காளர் பட்டியலில் இருந்து நீக்கப்படவுள்ள வாக்காளர்கள் தொடர்பாக உச்சநீதிமன்றம் இன்று முக்கிய உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது

வாக்காளர் பட்டியலில் முரண்பாடுகள் உள்ளதாகக் கண்டறியப்பட்டவர்களின் பெயர்களை, அந்தந்த கிராம பஞ்சாயத்து அலுவலகங்கள், தாலுகா அலுவலகங்கள் மற்றும் நகர்ப்புற வார்டு அலுவலகங்களில் பொதுப்பார்வைக்கு வைக்க வேண்டும் என்றும் அதில் ஆட்சேபனை உள்ளவர்கள் தங்களின் விவரங்களைச் சமர்ப்பிக்க 10 நாள்கள் கால அவகாசம் வழங்க வேண்டும் என்றும் தேர்தல் ஆணையத்திற்கு உச்ச நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

அதேபோல வாக்காளர் பட்டியல் பணிக்கு தேவையான அலுவலர்களை வழங்க வேண்டும் என மாநில அரசுக்கும் உத்தரவிட்டுள்ளது.

வாக்காளர் பட்டியலில் இருந்து நீக்கப்பட்ட வர்கள் பூத் ஏஜெண்டுகள் மூலமாக விண்ணப்பிக்கவும் அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

வருகிற பிப்.17-ஆம் தேதி இறுதி வாக்காளா பட்டியல் வெளியிடப்படவுள்ளது. தமிழகத்தில் தற்போது வரை 16 லட்சம் பேர், வாக்காளர் பட்டியலில் பெயர்களைச் சேர்க்க விண்ணப்பித்துள்ளது குறிப்பிடத்தக்கது.

**செய்திகள்**

**உடனுக்குடன் படிக்க**

**தினத்தளம்**

DHINATH DHALAM

**வாட்ஸ் அப் குரூப்பில் இணையுங்கள்**

Join my WhatsApp group.
https://chat.whatsapp.com/CgGZM7snNtZ0QMr6or5zVx?mode=wwt

# தங்கம் விலை ஒரே நாளில் சவரனுக்கு ரூ. 9,520 உயர்வு;

## வெள்ளி விலையும் அதிரடியாக உயர்ந்தது



தங்கம், வெள்ளி விலை: சென்னையில் ஆபரணத் தங்கம் மற்றும் வெள்ளியின் விலை வியாழக்கிழமை காலை அதிரடியாக உயர்ந்து புதிய உச்சத்தைத் தொட்டுள்ளது.

அமெரிக்க டாலருக்கு நிகரான இந்திய ரூபாயின் மதிப்பு சரிவு, சர்வதேச அளவில் தங்கத்தின் மீதான முதலீடு உயர்வு உள்ளிட்ட காரணங்களால் தங்கம் விலை தொடர்ந்து உயர்ந்து புதிய உச்சத்தை தொட்டு வருகிறது.

தங்கம் மற்றும் வெள்ளியின் விலை போட்டி போட்டுக் கொண்டு உயர்ந்து வரும் நிலையில், புதன்கிழமை மட்டும் தங்கம் சவரனுக்கு ரூ. 5,200 உயர்ந்து அதிர்ச்சி அளித்தது. ஒரு கிராம் ரூ. 15,610-க்கும், ஒரு சவரன் ரூ. 1,24,880-க்கும் விற்பனை செய்யப்பட்டது.

இந்த நிலையில், வியாழக்கிழமை காலை பேரதிர்ச்சி அளிக்கும் வகையில், தங்கம் சவரனுக்கு ரூ. 9,520 அதிகரித்துள்ளது. ஒரு கிராம் ரூ. 16,200-க்கும், ஒரு சவரன் ரூ. 1,34,400-க்கும் விற்பனை செய்யப்படுகிறது.

கடந்த இரண்டு நாள்களில் மட்டும் ஆபரணத் தங்கத்தின் விலை ரூ.14,720 அதிகரித்துள்ளதால் மக்கள் அதிர்ச்சி அடைந்துள்ளனர்.

இதனிடையே வெள்ளியின் விலை புதன்கிழமை கிராமுக்கு ரூ. 13 உயர்ந்த நிலையில், இன்று ரூ. 25 அதிகரித்துள்ளது. இன்றைய நிலவரப்படி, ஒரு கிராம் வெள்ளி ரூ. 425 ஆகவும், ஒரு கிலோ கட்டி வெள்ளி ரூ. 4.25 லட்சமாகவும் விற்பனை செய்யப்பட்டு வருகின்றது.



கள்ளக்குறிச்சி மாவட்டம் உளுந்தூர்பேட்டையை அடுத்த செம்மணங்கூரில் (அனைவருக்கும் கல்வி இயக்கம் அரசு ஆதி திராவிடர் நல தொடக்கப்பள்ளியில்)(ஏற்றம் அறக்கட்டளையின் சார்பாக)அங்குள்ள மாணவ மாணவிகளுக்கும் ஆசிரியர்களுக்கும் சுமார்(100 நோட்டு பேனா (மற்றும்) சாபிஸ் பாக்ஸ்கள் வழங்கப்பட்டது சிறப்பு விருந்தினராக: அமராவதி அன்னதான அறக்கட்டளையின் தலைமை ஒருங்கிணைப்பாளர் .ஏ.அஜித் குமார் .ஆண்ட்ரூசன் வீரமணி . ராஜவரன் ஆகியோர் இந்நிகழ்ச்சியில் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.



மதுரை சொக்கிகுளம் பகுதியில் என்பேன்ஸ் குழந்தைகள் மேம்பாட்டு மையம் துவக்க விழா நடைபெற்றது இதனை நிதித்துறை அமைச்சர் தங்கம்தென்னரசு சிறப்பு விருந்தினராக கலந்து கொண்டு குத்து விளக்கேற்றி துவக்கி வைத்தார். இந்நிகழ்வில் TN Chamber தலைவர் ஜெகதீசன், PSY கல்வி குழும நிர்வாக இயக்குநர் வரதராஜன், என்பேன்ஸ் மேம்பாட்டு மைய நிறுவனர் சரண்யாசண்முகராஜா, இயக்குநர் விக்னேஷ் உட்பட பலர் கலந்து கொண்டனர். இம்மையத்தில் பேச்சு சிகிச்சை தொழில் சிகிச்சை சிறப்பு கல்வி பிசியோதெரபி உளவியல் சேவைகள் நரம்பியல் வளர்ச்சி சிகிச்சை உணர்வு ஒருங்கிணைப்பு சிகிச்சை ABA சிகிச்சை உள்ளிட்ட சிறப்பு சேவைகள் குழந்தைகளுக்கு வழங்கப்பட உள்ளது.

## வள்ளலார் நினைவு தினத்தை முன்னிட்டு மது விற்பனை இல்லாத நாளாக (Dry Day) அனுசரிக்க வேண்டும்

## கலெக்டர் கந்தசாமி அறிவிப்பு



ஈரோடு மாவட்ட ஆட்சித்தலைவர் ச.கந்தசாமி செய்திக்குறிப்பு–

ஈரோடு மாவட்டத்தில் எதிர்வரும் (01.02.2026) வள்ளலார் நினைவு தினத்தை முன்னிட்டு அரசு மதுபானக் கடைகள், அதனுடன் இயங்கும் மதுக்கூடங்கள் மற்றும் எப்.எல்.1, எப்.எல்.2 மற்றும் எப்.எல்.3 மதுபான விடுதிகள்/ஹோட்டல்களில் உள்ள பார்கள் ஆகியவை மேற்கண்ட தினத்தில் மூடப்பட வேண்டும் எனவும், அன்றைய தினத்தில் மது விற்பனை இல்லாத நாளாக (Dry Day) அனுசரிக்க வேண்டும் என அரசு உத்தரவிட்டுள்ளதைத் தொடர்ந்து (01.02.2026) அன்று முழுவதும் ஈரோடு மாவட்டத்தில் செயல்பட்டு வரும் அரசு மதுபானக் கடைகள், அதனுடன் இயங்கும் மதுக்கூடங்கள் மற்றும் எப்.எல்.1, எப்.எல்.2 மற்றும் எப்.எல்.3 மதுபான உரிமதலங்கள் மூடப்பட்டிருக்கும்.அன்றையதினத்தில் மதுபான விற்பனைகள் ஏதும் நடைபெறாது,

அன்றைய தினம் மது விற்பனையில் ஈடுபடும் நபர்கள் மீது கடுமையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் என மாவட்ட ஆட்சித்தலைவர் ச.கந்தசாமி தெரிவித்து உள்ளார்.

### ஈரோடு மாவட்ட ஆட்சித்தலைவர் ச.கந்தசாமி தலைமையில்,

## உணவு பாதுகாப்பு பிரிவு சார்பில் அரசு மற்றும் தனியார் துறைகளுடன் மாவட்ட அளவிலான ஆலோசனைக்குழு கூட்டம்



ஈரோடு மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்ட அரங்கில் மாவட்டஆட்சித்தலைவர் ச.கந்தசாமி தலைமையில் உணவு பாதுகாப்பு பிரிவு சார்பில் அரசு மற்றும் தனியார் துறைகளுடன் மாவட்ட அளவிலான ஆலோசனைக்குழு கூட்டம் நடைபெற்றது. அனைத்து உணவு வணிகர்களுக்கும் உணவு பாதுகாப்பு துறை சார்ந்த உரிமம்/பதிவு பெற்றும் உணவுப்பொருள் கையாளுபவர்களுக்கான உணவு பாதுகாப்பு பயிற்சி பெற்று உணவு வணிகம் நடத்துவதை உறுதி செய்ய மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் அறிவுறுத்தினார். உணவகங்கள்/பேக்கரிகளில் ஆய்வு மேற்கொண்டு உணவுப்பொருட்களின் தரத்தினை உறுதி செய்திடவும், சாலையோரக்கடைகளில் சுகாதாரமான முறையில், உணவு விநியோகம்செய்வது குறித்தும், பள்ளிமற்றும்கல்லூரி விடுதிகள், மருத்துவமனைகளில் வழங்கப்படும் உணவுப்பொருட்களின்தரம் மற்றும் சுகாதாரத்தை மேம்படுத்த, தமிழ்நாடு அரசால் தடைசெய்யப்பட்ட புகையிலைப்பொருட்கள் விற்பனையை கட்டுப்படுத்தும் வகையில் நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும். ஒருமுறை உபயோகப்படுத்திய எண்ணெய்களை மீண்டும் பயன்படுத்தாத வகையில் உணவகங்கள்/ பேக்கரி நிறுவனங்கள் ஒரு முறை பயன்படுத்திய எண்ணெயை மறு சுழற்சி மூலம் பயோ–டீசல் தயாரிப்பிற்கு அனுப்புவதை உறுதி செய்திட வேண்டும் என மாவட்டஆட்சித்தலைவர் அவர்கள் அறிவுறுத்தினார்.

இக்கூட்டத்தில், உணவுபாதுகாப்புநியமனஅலுவலர்வரலட்சுமி மாவட்ட கூடுதல் காவல் கண்காணிப்பாளர்விவேகானந்தன், சுகாதார ஆய்வாளர் மணிவேல், ஈரோடு மாநகராட்சி சுகாதாரத்துறை, வேளாண்மை துறை, இந்து சமய அறநிலையத்துறை,மாவட்ட சுற்றுசுழல் மற்றும் மாசுக்கட்டுப்பாட்டுத்துறை, கூட்டுறவுத்துறை, மாவட்ட ஹோட்டல் உரிமையாளர் சங்கம், மாவட்ட வணிகர்கள் சங்கம், நுகர்வோர் சங்கம் மற்றும் துறை சார்ந்த அலுவலர்கள் கலந்து கொண்டனர்.



வாக்காளர் பட்டியல் பார்வையாளர் / தமிழ்நாடு தேசிய சுகாதார இயக்கத்தின் இயக்குநர் டாக்டர் அ.அருண் தம்புராஜ், இ.ஆ.ப.,அவர்கள் மாவட்ட தேர்தல் அலுவலர்/மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.கே.ஜே.பிரவீன்குமார்,இ.ஆ.ப.,அவர்கள் முன்னிலையில்(29.01.2026) மதுரை மாவட்டம், 189மதுரை கிழக்கு சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட முத்தமிழ் நகரில் வாக்காளர் பட்டியலில் பெயர் சேர்த்தல், திருத்தம், இடமாற்றம் தொடர்பாக பெறப்பட்ட படிவங்கள் குறித்து சரிபார்ப்புப் பணியினை மேற்கொண்டார்

### ஈரோடு மாவட்ட ஆட்சித்தலைவர் ச.கந்தசாமி

## அரச்சலூர், நவரசம் மகளிர் கலை மற்றும் அறிவியல் கல்லூரியில் நடைபெற்ற நலம் காக்கும் ஸ்டாலின் சிறப்பு திட்ட மருத்துவ முகாமினை பார்வையிட்டு, பயனாளிகளுக்கு நலத்திட்ட உதவிகளை வழங்கினார்



ஈரோடு மாவட்டம், அரச்சலூர்,நவரசம்மகளிர் கலை மற்றும் அறிவியல் கல்லூரியில் நேற்று (29.01.2026) மாவட்ட ஆட்சித்தலைவர் ச.கந்தசாமி நலம் காக்கும்ஸ்டாலின்சிறப்பு திட்ட மருத்துவ முகாமினை பார்வையிட்டு, பயனாளிகளுக்கு நலத்திட்ட உதவிகளை வழங்கினார்.

தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் பொதுமக்கள் பயன்பெறும் வகையில் நலம் காக்கும்ஸ்டாலின்சிறப்பு திட்ட மருத்துவ முகாம் 02.08.2025 அன்று துவக்கி வைக்கப்பட்டது. தமிழ்நாடு முழுவதும் இத்திட்டத்தினால் எண்ணற்ற பயனாளிகள் பயன்பெற்று வருகின்றனர். அதன்படி, ஈரோடு மாவட்டத்தில் 37–வது மருத்துவ முகாம் நேற்று 29.01.2026 அரச்சலூர், நவரசம் மகளிர் கலை மற்றும் அறிவியல் கல்லூரியில் நடைபெற்றது. இம்மருத்துவ முகாம்களில் 17 சிறப்பு மருத்துவர்கள் மற்றும் 10 மருத்துவர்கள் என மொத்தம் 27 மருத்துவர்கள் கலந்து கொண்டு சிகிச்சை அளித்தார்கள். இம்முகாம்களில்கலந்து கொள்ளும் அனைவருக்கும் கண் பரிசோதனை, பல் சிகிச்சை, ரத்தப்பரிசோதனை, ECG, X–RAY பரிசோதனைகளும் கூடுதலாக பெண்களுக்கு கர்பப்பைவாய் புற்றுநோய், மார்பக புற்றுநோய் பரிசோதனைகளும் செய்யப்பட்டது. மருத்துவர்கள் பரிசோதனை செய்து தேவையான மருந்து மாத்திரைகள் வழங்கி, மேல் சிகிச்சை தேவைப்படுவோருக்கு சிறப்பு மருத்துவர்களை கொண்டு பரிசோதனை செய்து ECHO போன்ற உயர் பரிசோதனைகளும் மேற்கொள்ளப்பட்டு. உயர் சிகிச்சை தேவைப்படுவோர் பரிந்துரை செய்யப்பட்டார்கள்.

ஈரோடு மாவட்டத்தில் இதுவரை 36 மருத்துவ முகாம்கள் நடைபெற்றுள்ளது. இந்த முகாம்களில் 47,279 பயனாளிகளுக்கு மருத்துவ பரிசோதனை மற்றும் உயர் சிறப்பு சிகிச்சை வழங்கப்பட்டது. 26,760 நபர்களுக்கு ECG–ம், 31,219 நபர்களுக்கு ஆய்வக பரிசோதனையும் 3.156 நபர்களுக்கு X–RAYம். 2.920 நபர்களுக்கு Scan–ம்,3,528 நபர்களுக்கு ECHO–ம்,வழங்கப்பட்டுள்ளது.

நேற்றைய தினம், மாவட்ட ஆட்சித்தலைவர் ச.கந்தசாமி நவரசம் மகளிர் கலை மற்றும் அறிவியல் கல்லூரியில் நடைபெற்ற நலம் காக்கும் ஸ்டாலின் மருத்துவ முகாமினை நேரில் பார்வையிட்டு 6 கர்ப்பிணி தாய்மார்களுக்கு ஊட்டச்சத்து பெட்டகங்களும், 6 நபர்களுக்கு மக்களைத் தேடி மருத்துவம் திட்டத்தின் கீழ் மருந்துப் பெட்டகங்களும், 1 நபர்களுக்கு சஞ்சீவி பெட்டகமும் என மொத்தம் 13 பயனாளிகளுக்கு நலத்திட்ட உதவிகளை வழங்கினார்.

இம்முகாமில், மருத்துவர்கள், செவிலியர்கள் மற்றும்துறைசார்ந்த அலுவலர்கள் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

## கொள்ளை அடிப்பதில் மட்டுமே கவனம்; பெண்கள், குழந்தைகள் பாதுகாப்பில் இல்லை: த.வெ.க. தலைவர் விஜய் குற்றச்சாட்டு





தமிழகத்தில் அடுத்தடுத்த பாலியல் வன்கொடுமைச் சம்பவங்கள் அதிர்ச்சியளிப்பதாக திமுக அரசு மீது தவெக தலைவர் விஜய் குற்றம் சாட்டியுள்ளார்.

தவெகதலைவர்விஜய், தனது எக்ஸ் பக்கத்தில் "தமிழகத்தில் சட்டம் ஒழுங்கு சீரழிந்துவிட்டது என்பதற்குச் சான்றாக நாள்தோறும் குற்றச் சம்பவங்கள் அதிகரித்து வருகின்றன. தலைநகர் சென்னையில் அடுத்தடுத்த பாலியல் வன்கொடுமைச் சம்பவங்களால் தமிழகமே அதிர்ச்சியில் ஆழ்ந்துள்ளது.

சென்னை அடையாறு பகுதியில் காவலாளியாக வேலை பார்த்து வந்த பிகார் மாநிலத்தைச் சேர்ந்த தொழிலாளியும் அவர் மனைவியும் குழந்தையும் படுகொலை செய்யப்பட்ட சம்பவமும், நந்தனத்தில் அரசுக் கல்லூரி கேண்டீனில் பணிபுரிந்த இளம்பெண் பாலியல் வன்முறைக்கு உள்ளாக்கப்பட்ட சம்பவமும் பெரும் அதிர்ச்சியையும் வேதனையையும் அளிக்கின்றன.

இச்சம்பவங்கள்,கடும் கண்டனத்திற்கு உரியவை. தமிழ்நாட்டு மக்களுக்கும் பாதுகாப்பு இல்லை, பிழைப்புக்காகத் தமிழ்நாட்டை நம்பி வந்தவர்களுக்கும் பாதுகாப்பு இல்லை என்ற சூழலைத்தான் இந்தக் கபட நாடகத்திமுகஅரசு உருவாக்கி வைத்திருக்கிறது.

கொள்ளை அடிப்பதில் மட்டுமே கவனம் செலுத்துவதால், பெண்கள், குழந்தைகளுக்கு எதிரான குற்றச் செயல்களைத் தடுப்பதிலும், சட்டம் ஒழுங்கைக் காப்பதிலும் இந்த ஆட்சியாளர்கள் கவனம் செலுத்துவதில்லை.

இதனால்தான் கல்வி நிறுவனங்களிலும் பெண்களுக்கு எதிரான பாலியல் வன்கொடுமைச் சம்பவங்கள் அதிகரிக்கின்றன. குற்றவாளிகளுக்குக் கடும் தண்டனை வாங்கிக் கொடுக்க வேண்டிய அரசு, மெத்தனப் போக்கைக் கடைப்பிடிப்பதால், கொடுங்குற்றங்களில் ஈடுபடச் சமூக விரோதக் கும்பல்களுக்குத் துணிச்சல் வருவதாகப் பொதுமக்கள் குற்றம் சாட்டுகின்றனர்.

குற்றச் செயல்களில் ஈடுபட்டவர்களுக்குத் தண்டனை பெற்றுத் தர உடனடியாக உரிய நடவடிக்கைஎடுக்கவேண்டும்.

ஆனால், முதல்வர் கொஞ்சம் கூட மனசாட்சியே இல்லாமல் பெண்களுக்குப் பாதுகாப்பான மாநிலம் தமிழ்நாடு என்றும், எந்தக் கொம்பனாலும் குறை சொல்ல முடியாத ஆட்சி என்றும் வாய்கூசாமல் பொய்யையே திரும்பத் திரும்பக் கூறி வருகிறார்.

ஆட்சியின் இறுதிக் கால நாள்களை எண்ணிக்கொண்டிருக்கும் முதல்வர், இனி இருக்கும் கொஞ்சம் நாள்களிலாவது சட்டம் ஒழுங்கைப் பாதுகாக்க, தேவையான நடவடிக்கைகளை எடுக்கவேண்டும். மக்களுக்கு எதிரான, மக்களுக்குக் கொஞ்சமும் பாதுகாப்பே இல்லாத, இந்த வெற்று விளம்பர மாடல் ஆட்சிக்கு முடிவுரை எழுதத் தமிழக மக்கள் தயாராகிவிட்டார்கள்" என்று குறிப்பிட்டுள்ளார்.



ஈரோடு மாவட்டம் அவல்பூந்துறை அடுத்த ராட்டைசுற்றிபாளையத்தில், பிரசித்தி பெற்றதென்னககாசிபைரவர்கோவில்உள்ளது.இங்குஉலகிலேயேஎங்கும்இல்லாதவாறு அறுபத்து நான்கு பைரவர்களும் ஒரே இடத்தில் இருப்பது மட்டுமல்லாது 39 அடி கால பைரவர் சிலை மிக பிரம்மாண்டமாக நிறுவப்பட்டுள்ளது. இக்கோவிலில் நேற்று சுவாமிக்கு சிறப்பு அபிஷேகம் மற்றும் அலங்கார பூஜை நடைபெற்றது. இதில் ஏராளமான பக்தர்கள் பங்கேற்று சுவாமி தரிசனம் செய்தனர்.



ஈரோடு மாநகராட்சி ஜனவரி மாத மாமன்ற உறுப்பினர்கள் கூட்டம் மாநகராட்சி கூட்ட அரங்கில் மேயர் நாகரத்தினம் சுப்பிரமணியம் தலைமையில் நேற்று (29.01.2026) நடைபெற்றது. ஆணையாளர் அர்பித் ஜெயின், துணை மேயர் வே.செல்வராஜ், மண்டல தலைவர்கள் மற்றும் மாமன்ற உறுப்பினர்கள் உட்பட மாநகராட்சி உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

### கோவையில் வரும் 18ம் தேதி முதல், 24ம் தேதிவரை 33வது ஸ்ரீ ராகவேந்திரா ஸப்தாஹ மஹோத்ஸவ நிகழ்ச்சி

# கோவை ராம் நகரில் உள்ள ஐயப்ப பூஜா சங்க வளாகத்தில் நடைபெற உள்ள நிலையில், திரைப்பட நடிகர் ரஜினிகாந்த், மற்றும் ராகவா லாரன்ஸ் பங்கேற்க வாய்ப்பு

கோவை காந்திபுரம் அடுத்த ராம்நகர் பகுதியில் உள்ள ஐயப்ப பூஜா சங்கவளாகத்தில் வரும் 18ஆம் தேதி முதல் 24 ஆம் தேதி வரை, ஸ்ரீராகவேந்திரஸ்வாமிஜியின் பட்டாபிஷேகம் மற்றும் தினோத்ஸவத்தின் 33 வது ஸ்ரீ ராகவேந்திர ஸப்தாஹ மஹோத்சவ நிகழ்ச்சி நடைபெற உள்ளது. இதற்கான அறிவிப்பு இன்று கோவை பந்தய சாலையில் நடைபெற்றது அப்பொழுது செய்தியாளர்களை சந்தித்து பேசிய விழா குழு

தலைவர் வழக்கறிஞர் சுந்தரவடிவேலு, செயலாளர் ராம்ராஜ்,

அமைப்பாளர் ஸ்ரீனிவாசபட் ஆகியோர் கூறியதாவது..

கோவையில் 33வது ஸ்ரீ ராகவேந்திர ஸப்தாஹ மஹோத்ஸவ நிகழ்ச்சி கோவை ராம் நகரில் உள்ள ஐயப்ப பூஜா சங்க வளாகத்தில் வரும் பிப்ரவரி மாதம், 18ஆம் தேதி முதல் 24ஆம் தேதி வரை நடைபெற உள்ளது. இந்த விழாவில் தினமும் ஒவ்வொரு சிறப்பு வழிபாடுகள், பஜனைகள், பூஜைகள், அபிசேகங்கங்கள் ராகவேந்திரக்கு நடைபெற உள்ளதாகவும், ஒரு வாரத்தில் உள்ள 7 தினங்களும் பல்வேறு விசேஷ பூஜைகளுக்கு ஏற்பாடு செய்யப்பட்டு இருப்பதாக தெரிவித்தனர். மேலும் ஸ்ரீராகவேந்திரஸ்வாமிகளின் 450வது பட்டாபிஷேக தினமாகவும், 431வது வர்தந்தி உற்சவமாகவும் இந்த பூஜைகள் நடைபெற உள்ளது. இதில் பல்வேறு மடாலய சுவாமிகள், மூத்த குருமார்கள், மடாதிபதிகள், கலந்துகொண்டு விழாவினை சிறப்பிக்க உள்ளதாகவும், ராகவேந்திர ஸ்வாமிகளின் தீவிர பக்தர்களான திரைப்பட



நடிகர்கள் நடிகர் ரஜினிகாந்த், ராகவா லாரன்ஸ், ஆகியோருக்கும் இந்த பூஜையில் கலந்து கொள்ள அழைப்பு விடுத்துள்ளதாகவும், அவர்களும் நிச்சயமாக இந்த விழாவில் கலந்து கொண்டு சிறப்பு வழிபாடுகளில் தங்களை ஈடுபடுத்திக் கொள்வார்கள் என்று நம்புவதாக தெரிவித்தனர். மேலும் ஒரு வார காலத்திற்கு நடக்கும் இந்த சிறப்பு பூஜைகள் அனைத்தையும் கண்டு வழிபட, பொதுமக்களுக்கு இலவச தரிசனம் ஏற்பாடு செய்துள்ளதாகவும், எனவே பொதுமக்கள் அனைவரும் கலந்து கொண்டு, ஸ்ரீ ராகவேந்திரர் அருள் பெற்று செல்ல வேண்டும் என்று தெரிவித்தனர் என்பது குறிப்பிடத்தக்கது.

# சுற்றுலா துறையின் வளர்ச்சிக்கு உதவும் மத்திய, மாநில அரசுகள்,...

## கோவை தமிழ்நாடு உணவகத்தில் நடைபெற்ற சுற்றுலா துறை சார்ந்த கண்காட்சியில், இந்திய உள்நாட்டு சுற்றுலா ஆபரேட்டர்கள் சங்கத்தினர் தெரிவித்துள்ளனர்

உலகம் முழுவதும் சுற்றுலாத்துறை அதிவேக வளர்ச்சி அடைந்து வரும் நிலையில், ஒவ்வொரு பகுதி மக்களும், பல இடங்களுக்கு சென்று, அங்குள்ள சுற்றுலா தளங்களை பார்ப்பதற்கு ஆர்வம் காட்டி வருகின்றனர். இதனை கருத்தில் கொண்டும் சுற்றுலாத்துறை சார்ந்த நிறுவனங்களின் வளர்ச்சிக்கு உதவிடும் வகையில், அந்நிறுவனங்களின் சந்திப்பு, ஜூபிடர் டிராவல் எக்சிபிஷன் நிறுவனம் சார்பில் கோவை தமிழ்நாடு உணவகத்தில் இந்திய பயண சந்தை கண்காட்சி எனும் தலைப்பில் நடைபெற்றது. இந்த நிகழ்ச்சியானது,மைசூர், மங்களூர், மதுரை, திருச்சி, மற்றும் வேலூர், ஆகிய இடங்களில் வெற்றிகரமாக நடைபெற்றதை தொடர்ந்து, தற்பொழுது கோவையில் நடைபெற்றது. இந்த கண்காட்சிக்கு சுற்றுலா பயண முகவர்கள், இத்துறை சார்ந்த நிபுணர்கள், மற்றும் தொழில் ஆர்வலர்கள் பலரும் கலந்து கொண்




டனர். தமிழ்நாடு, அந்தமான், கேரளா, கர்நாடகா, மகாராஷ்டிரா, மேற்கு வங்காளம், மற்றும் கோவா, போன்ற மாநிலங்களைச்சேர்ந்த கண்காட்சியாளர்களுடன் பயண முகவர்கள் தங்களது அரங்குகளை அமைத்திருந்தனர். இக்கண்காட்சியின் மூலமாக, வியட்நாம், தாய்லாந்து, இங்கிலாந்து, சிங்கப்பூர், பூட்டான், பாலி, மலேசியா, துபாய், போன்ற சர்வதேச நாடுகளைச் சார்ந்தவர்களும் கலந்து கொண்டனர். மேலை நாடுகளில், புதிய தொழில் வாய்ப்புகளை ஆராயவும், சுற்றுலா துறையின் நவீன போக்குகளை அறிந்து கொள்ளவும், இக்கண்காட்சி பேருஉதவியாக அமைந்தது. இந்த நிகழ்ச்சியில், சிறப்பு விருந்தினராக இந்திய உள்நாட்டு சுற்றுலா ஆப்பரேட்டர்கள் சங்க தமிழக பிரிவின் தலைவர் அசோக் குமார், தேசிய மற்றும் மாநில விருது பெற்ற ராதாகிருஷ்ணன், மாநில விருது பெற்றுள்ள பஞ்சவர்ணம், ராதாகிருஷ்ணன், மற்றும் இந்திய உள்நாட்டு சுற்றுலா ஆப்பரேட்டர்கள் சங்க தமிழ்நாடுபிரிவின்செயலாளர் பாலு உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர் என்பது குறிப்பிடத்தக்கது

# ஸ்ரீ முத்துமாரியம்மன் ஸ்ரீ தர்மசாஸ்தா நூதன ஆலய ஜீர்ணோத்தாரண அஷ்டபந்தன மஹா கும்பாபிஷேகம்



செங்கல்பட்டு மாவட்டம் மதுராந்தகம் வட்டம் நெ.110 பெரும்பேர்கண்டிகை கிராமத்தில் அருள்மிகு ஸ்ரீ முத்துமாரியம்மன் மற்றும் ஸ்ரீதர்மசாஸ்தா நூதன ஆலய ஜீர்ணோத்தாரண அஷ்டபந்தன மஹா கும்பாபிஷேக விழா வெகு விமர்சையாக நடைபெற்றது. முன்னதாகசெவ்வாய் கிழமை காலை மங்கள இசை, விக்னேஷ்வர பூஜை,புண்யாகவாசனம், கோபூஜை, கணபதி ஹோமம், லஷ்மி ஹோமம், நவக்கிரஹ ஹோமம், பூர்ணாஹுதி, தீபாராதனை, பிரசாதம் வழங்குதல் நடைபெற்று

மாலை 5.00 மணிக்கு வாஸ்து சாந்தி, ப்ரவேச பலி, ருத்ஸங்கிரஹணம், அங்குரார்ப்பணம், ரக்ஷாபந்தணம், கும்பஅலங்காரம், கலாகர்ஷணம், யாக சாலை பிரவேசம், முதற்கால யாகசாலைபூஜை ஆரம்பம் கோபுர கலசம் பதிவித்தல், யந்திரஸ்தாபனம், பிம்ப பிரதிஷ்டை, பூர்ணாஹூதி, தீபாராதனை பிரசாதம் வழங்குதல் காலை 7.00 மணிக்கு மங்கள இசை, இரண் ாம் கால யாகசாலை பூஜை ஆரம்பம், நாடி சந்தானம், தத்துவார்ச்சனை அவப்ருத யாகம், ஸ்பர்சாஹூதி, யஜமானர் சங்கல்பம், முடிந்து புதன்கிழமை 10.00மணிக்கு மஹாபூர்ணாஹூதி, யாத்ராதானம் கலசம் புறப்படுதல் விமான கும்பாபிஷேகம்

பரிவார மூர்த்திகள் கும்பாபிஷேகம் நடைபெற்று காலை11.10 மணிக்கு மூலவர் ஸ்ரீமுத்து மாரியம்மன்

ஸ்ரீ தர்மசாஸ்தா கும்பாபிஷேகம் சர்வ சாதகம் சிவஸ்ரீ ஆர்.ரவிச்சந்திர சிவாச்சாரியார், சிவஸ்ரீ ஆர்.சங்கர சிவாச்சாரியார், சிவஸ்ரீ பி.வேதமூர்த்தி சிவாச்சாரியார் ஆகியோரின் தலைமையில் பக்தர்களுக்கு தீபாராதனை காண்பிக்கப்பட்டது.

ஸ்ரீ முத்துமாரியம்மன், ஸ்ரீ தர்மசாஸ்தா விசேஷ அலங்காரத்துடன் திருவீதி உலா வந்து பக்தர்களுக்கு அ

இந்நிகழ்ச்சிக்கான ஏற்பாட்டினை ரவி, சுந்தர், குடும்பத்தினர்

மற்றும் கிராம பொதுமக்கள் இளைஞர்கள் விழா குழுவினர் சிறப்பாக செய்திருந்தனர்.

# மும்பை போலீஸ் என்று கூறி கேரள முன்னாள் அமைச்சரை மிரட்டி பணம் பறிக்க முயற்சி

திருவனந்தபுரம்: மும்பை போலீஸ் என்று கூறி கேரள முன்னாள் அமைச்சரும், காங்கிரஸ் மூத்த தலைவருமான திருவஞ்சூர் ராதாகிருஷ்ணனை மிரட்டி பணம் பறிக்க முயற்சித்த சம்பவம் பரபரப்பை ஏற்படுத்தி உள்ளது. சமீப காலமாக ஆன்லைன் மோசடியும், விர்ச்சுவல் அரெஸ்ட் என்ற பெயரில் மிரட்டி பணம் பறிக்கும் சம்பவங்களும் அதிகரித்து வருகின்றன.இந்தநிலையில் நேற்று கேரள முன்னாள் அமைச்சரும், தற்போதைய காங்கிரஸ் எம்எல்ஏவுமான திருவஞ்சூர் ராதாகிருஷ்ணனுக்கு வாட்ஸ் அப்பில் ஒரு வீடியோ கால் வந்தது.



அதில் போலீஸ் சீருடையில் தோன்றிய ஒருவர், தான் மும்பை போலீஸ் என்றும் உங்களுடைய ஆதாரை பயன்படுத்தி மும்பையில் மோசடி நடந்துள்ளது என்றும், இது தொடர்பாக வழக்கு பதிவு செய்யப்பட்டிருப்பதால் உடனே உங்களது போனில் இருந்து எங்களை அழைக்க வேண்டும் என்றும் கூறியுள்ளார். வழக்கு பதிவு செய்து செய்யப்பட்டிருந்தால் அதற்கான எஃப்ஐஆர் எண்ணை தரும்படி திருவஞ்சூர் ராதாகிருஷ்ணன் அந்த நபரிடம் கூறினார். ஆனால் அந்த நபர் கொடுத்த எஃப்ஐஆர் எண் போலி என்பதை தெரிந்துகொண்ட திருவஞ்சூர் ராதாகிருஷ்ணன் பின்னர் பேசுவதாக கூறி அழைப்பை துண்டித்துவிட்டார்.

அதன் பிறகு அவர் சம்பவம் குறித்து கேரள டிஜிபியிடம் புகார் செய்தார். இது தொடர்பாக சைபர் கிரைம் போலீசார் வழக்கு பதிவு செய்து விசாரணை நடத்தி வருகின்றனர். முன்னாள் அமைச்சரிடமே மோசடி செய்ய முயற்சித்த சம்பவம் கேரளாவில் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

# காவல்துறையினருக்கு பிறந்தநாள், திருமண நாளில் சிறப்பு விடுப்பு கர்நாடக டிஜிபி உத்தரவு




கர்நாடகத்தில் காவல்துறையினர் பிறந்தநாள், திருமண நாளில் விடுமுறை எடுத்துக் கொள்ளலாம்என்றபுதியதொரு அறிவிப்பை வெளியிட்டுள்ளாற் அம்மாநில டிஜிபி.

கர்நாடக காவல்துறை இயக்குநர் (டிஜிபி) எம். ஏ. சலீம் வெளியிட்டுள்ள சுற்றறிக்கையின்படி, காவலர்களுக்கு சிறப்பு விடுமுறை அறிவிக்கப்படுகிறது.இதனைப்பயன்படுத்தி அவர்கள் தங்கள் பிறந்தநாள் மற்றும் திருமண நாளைக் கொண்டாட விடுமுறை எடுத்துக் கொள்ளலாம் என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

டிஜிபியின் இந்தப்புதிய உத்தரவு காவலர்களின் மன அழுத்தத்திலிருந்தும், பணிச் சுமையிலிருந்தும் விடுபட பேருதவியாக இருந்து அவர்கள் மன, உடல்நலம் சிறக்க முன்னோடித் திட்டமாக அமைந்துள்ளதாகவும், இந்த உத்தரவு, காவலர்கள் மட்டுமில்லாது அவர்தம் குடும்பங்களிடமும் மிகுந்த வரவேற்பைப் பெற்றுள்ளதாக கர்நாடக அதிகாரிகள் தெரிவித்தனர்.



# தமிழ்நாட்டில் 11 மாவட்டங்களில் 2 நாட்களுக்கு பனிமூட்டம் காணப்படும்

சென்னை: தமிழ்நாட்டில் 11 மாவட்டங்களில் 2 நாட்களுக்கு அதிகாலையில் பனிமூட்டம் காணப்படும் என வானிலை மையம் தகவல் தெரிவித்துள்ளது. தருமபுரி, கிருஷ்ணகிரி, திருப்பத்தூர், வேலூர், ராணிப்பேட்டை, திருவள்ளூர் மாவட்டங்களில் மிதமான பனிமூட்டத்திற்கு வாய்ப்பு. ஈரோடு, சேலம், நாமக்கல், திருச்சி, கரூர் மாவட்டங்களில் அதிகாலை வேளையில் லேசான பனிமூட்டத்திற்கு வாய்ப்புள்ளது.

# சத்தீஸ்கரில் 2 நக்சல்கள் சுட்டுக்கொலை; ஆயுதங்கள் பறிமுதல்!

பிஜப்பூர் மாவட்டத்தில், மாவட்ட ரிசர்வ் காவல் படை உள்ளிட்ட பாதுகாப்புப் படைகள் இணைந்து இன்று (ஜன. 29) காலை 7 மணி முதல் நக்சல்களுக்கு எதிரான நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றன. அங்குள்ள வனப்பகுதியில் பதுங்கியிருந்த நக்சல்களுக்கும் பாதுகாப்புப் படையினருக்கும் இடையே கடும் துப்பாக்கிச் சண்டை நடைபெற்றதாகக் கூறப்படுகிறது.

இந்த நிலையில், இந்தத் தாக்குதலில் கொல்லப்பட்ட 2 நக்சல்களின் உடல்கள் அப்பகுதியில் கண்டெடுக்கப்பட்டதாகவும், அவர்களிடம் இருந்து ஏகே 47 ரக துப்பாக்கிகள் பறிமுதல் செய்யப்பட்டதாகவும் அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்

. ஆனால், இந்தச் சம்பவம் மற்றும் கொல்லப்பட்ட நக்சல்கள் குறித்த விவரங்கள் இதுவரை வெளியிடப்படவில்லை.

மேலும், பிஜப்பூரில் சாலையின் நடுவே அரசுப் படைகளைக் குறிவைத்து நக்சல்கள் பொருத்தியிருந்த 20 முதல் 30 கிலோ எடையுள்ள 2 ஐ.ஈ.டி. எனப்படும் வெடி குண்டுகளைக் கண்டுபிடித்த பாதுகாப்புப் படையினர் அதனைச் செயலிழக்கச் செய்துள்ளனர்.

முன்னதாக, வரும் மார்ச் மாதத்தின் இறு



திக்குள் நாட்டிலுள்ள நக்சல்கள் அனைவரும் அழிக்கப்படுவார்கள் என மத்திய அரசு அறிவித்துள்ளது குறிப்பிடத்தக்கது.



ஈரோடு மாவட்டம் பவானி வர்ணபுரத்தில் திருப்பூர் எம்.பி. சுப்பராயனின் தொகுதி மேம்பாட்டு நிதி ₹15 லட்சத்தில் புதிய ரேஷன் கடை கட்ட அடிக்கல் நாட்டப்பட்டது. இந்நிகழ்வில் நகர்மன்றத் தலைவர் சிந்தூரி இளங்கோவன், துணைத் தலைவர் மணி மற்றும் திமுக, இந்திய கம்யூனிஸ்ட் கட்சி நிர்வாகிகள் கலந்துகொண்டு பணிகளைத் தொடங்கி வைத்தனர்.



ஈரோடு மாவட்டம் கோபிசெட்டிபாளையம் ஏ.ஆர்.எஸ் நகரில், திமுக சார்பில் டார்ப்36 நடத்திய 'உதயாகோப்பை2026' முதலாம் ஆண்டு கிரிக்கெட் தொடர் ஜனவரி 24, 25 மற்றும் 26 ஆகிய தேதிகளில் நடைபெற்றது. இப்போட்டியை திமுக மாவட்ட செயலாளர் என். நல்லசிவம் நேரில் தொடங்கி வைத்தார். இறுதிப் போட்டியில் வெற்றி பெற்ற முதல் நான்கு அணிகளுக்கு சுழற்கோப்பைகள் மற்றும் ரொக்கப் பரிசுகளை வழங்கிய அவர், விளையாட்டு வீரர்களைப் பாராட்டி வாழ்த்தினார்.




ஈரோடு மாவட்டம் பெருந்துறை நகராட்சிக்கு உட்பட்ட ஜீவா நகர் பகுதியில், திமுக சார்பில் பொங்கல் விழா விளையாட்டுப்போட்டிகள் நடைபெற்றன. இதில் கபடி, கிரிக்கெட், பானை உடைத்தல், ஓட்டப்பந்தயம் போன்ற போட்டிகளில் வெற்றி பெற்றவர்களுக்கு, முன்னாள் அமைச்சர் தோப்பு வெங்கடாசலம் பரிசுகளை வழங்கினார்.

# உ.பி.யில் பிப்.9 முதல் சட்டப்பேரவைக் கூட்டத்தொடர்: பிப்.11ல் பட்ஜெட் தாக்கல்!



உத்தரப் பிரதேசத்தில் சட்டப்பேரவையின் பட்ஜெட் கூட்டத்தொடர் பிப்ரவரி 9-ஆம் தேதி தொடங்க உள்ளதாக நிதி மற்றும் நாடாளுமன்ற விவகாரத்துறை அமைச்சர் சுரேஷ் குமார் கன்னா தெரிவித்தார்.

அமைச்சரவைக் கூட்டத்திற்குப் பிறகு செய்தியாளர்களிடம் பேசிய அவர்,

பிப்ரவரி 9-ஆம் தேதி ஆளுநர் ஆனந்திபென் படேலின் உரையுடன் கூட்டத்தொடர் தொடங்கும் என்றார்.

பிப்ரவரி 10-ஆம் தேதி, இந்தாண்டில் காலமான சட்டப்பேரவை உறுப்பினர்களுக்கு அஞ்சலி செலுத்தப்படும், பிப்ரவரி 11-ஆம் தேதி காலை 11 மணிக்கு பட்ஜெட் தாக்கல் செய்யப்படும் என்றும் அவர் கூறினார்.

கடைசியாக முழு பட்ஜெட் பிப்ரவரி 20, 2025 அன்று தாக்கல் செய்யப்பட்டது. அப்போது மாநில அரசு 2025-26 நிதியாண்டிற்காக ரூ. 8,08,736 கோடி பட்ஜெட்டைத் தாக்கல் செய்தது. இது முந்தைய நிதியாண்டை விட 9.8 சதவீதம் அதிகமாகும்.

2024-25 நிதியாண்டுக்கான பட்ஜெட் ரூ. 7,36,437 கோடியாகத் தாக்கல் செய்யப்பட்டது. பின்னர், டிசம்பர் 2025 அன்று, வருவாய் தேவைகளைப் பூர்த்தி செய்வதற்கும், குறிப்பாக உள்கட்டமைப்பு துறையில் மூலதனச் செலவினங்களை அதிகரிப்பதற்கும் ரூ. 24,496.97 கோடி மதிப்புள்ள கூடுதல் மானியக் கோரிக்கைகளை அரசு தாக்கல் செய்தது குறிப்பிடத்தக்கது.

# இனி ஏடிஎம்களில் ரூ. 10, 20, 50 நோட்டுகள்!



நாடு முழுவதும் உள்ள ஏடிஎம் மையங்களில் ரூ. 10, 20 மற்றும் 50 மதிப்புள்ள நோட்டுகளை வைக்க மத்திய அரசு திட்டமிட்டு வருகின்றது.

நாட்டில் உள்ள மக்களில் பெரும்பாலானோர் யுபிஐ, டெபிட்-கிரெடிட் கார்டு போன்ற டிஜிட்டல் பணப் பரிவர்த்தனை முறைக்கு வேகமாக மாறி வருகின்றனர்.

யுபிஐ மூலம் பணப் பரிவர்த்தை செய்யும் முறை நாளுக்குநாள் அதிகரித்து வருகின்றது. கடந்த டிசம்பர் மாதத்தில் மட்டும் யுபிஐ மூலம் ரூ. 28 லட்சம் கோடி பணப் பரிவர்த்தை நடைபெற்றுள்ளது. கடந்த ஒரே ஆண்டில் மட்டும் கிட்டத்திட்ட ரூ. 300 லட்சம் கோடி பணப் பரிவர்த்தனை நடைபெற்றுள்ளது.

இருந்தாலும், டிஜிட்டல் பணப் பரிவர்த்தனை முறைக்கு மாறாத மக்களும், சிறிய வியாபாரிகளும் அன்றாட பரிவர்த்தனைகளுக்கு பணத்தையே நம்பியுள்ளனர்.

கடைகளில் ரூ. 500 நோட்டை கொடுத்து ஒருவர் பொருள் வாங்கினால், அவருக்கு மீதிச் சில்லறைகூட கொடுக்கமுடியாதவகையில் வியாபாரிகள் சிரமத்துக்கு உள்ளாகியுள்ளனர்.

ஏடிஎம்களிலும் ரூ.1,000, ரூ.500, ரூ.100 ஆகிய கரன்சி நோட்டுகள் மட்டுமே உள்ளதால் குறைந்த மதிப்புள்ள பணம் கிடைப்பதில் தொடர்ந்து சிக்கல் நீடித்து வருகின்றது.

இந்தநிலையில், நாடுமுழுவதும் உள்ள ஏடிஎம் மையங்களில் ரூ.10, 20 மற்றும் 50 மதிப்புள்ள கரன்சி நோட்டுகளை வைக்க மத்திய அரசு திட்டமிட்டுள்ளது. ரூ. 500, 200 போன்ற நோட்டுகளை கொடுத்து சிறிய மதிப்புள்ள நோட்டுகளை பெறும் வகையில் 'ஹைப்ரிட் ஏடிஎம்'கள் வைக்கப்படவுள்ளன.

தற்போது மும்பையில் சோதனை முறையில் இந்தத் திட்டம் அறிமுகம் செய்யப்பட்டுள்ளது. பணப் பரிவர்த்தனைகள் அதிகம் நடைபெறக் கூடிய உள்ளூர் சந்தைகள், ரயில் நிலையங்கள், பேருந்து நிலையங்கள், மருத்துவமனைகள் உள்ளிட்ட இடங்களில் நிறுவப்பட்டுவருகின்றன.

தொடர்ந்து, நாட்டின் பல்வேறு பகுதிகளிலும் 'ஹைப்ரிட் ஏடிஎம்'கள் நிறுவத் திட்டமிடப்பட்டுள்ளது.

மத்திய அரசின் இந்த முயற்சி, வேகமாக வளர்ந்து வரும் டிஜிட்டல் பொருளாதாரத்தையும், இன்னும் முழுமையாக டிஜிட்டல் மயமாகாத கோடிக்கணக்கான மக்களின் அன்றாடப் பணத் தேவைகளையும் சமநிலைப்படுத்துவதற்கான ஒரு முயற்சியாக அமைந்துள்ளது.

# மகாராஷ்டிர அமைச்சரவையில் அஜீத் பவார் மனைவிக்கு இடம்:



மறைந்த மகாராஷ்டிர துணை முதல்வர் அஜீத் பவாரின் மனைவி சுனேத்ரா பவாரை மாநில அமைச்சரவையில் சேர்க்க மக்கள் விரும்புவதாக மூத்த என்சிபி தலைவரும், மகாராஷ்டிர உணவு மற்றும் மருந்து நிர்வாகத் துறை அமைச்சருமான நர்ஹரி ஜிர்வாள் தெரிவித்தார்.

அஜீத் பவாரின் தேசியவாத காங்கிரஸ் கட்சி (என்சிபி), பாஜக மற்றும் ஏக்நாத் ஷிண்டே தலைமையிலான சிவசேனா ஆகியவற்றுடன் இணைந்து ஆளும் மகாயுதி கூட்டணியில் ஒரு அங்கமாக உள்ளது.

சுனேத்ரா பவார் தற்போது மாநிலங்களவையின் உறுப்பினராக உள்ளார். இந்த நிலையில் என்சிபியின் எதிர்காலம் குறித்து அமைச்சர் ஜிர்வாள் கூறியதாவது,

மாநில அமைச்சரவையில் அஜீத் பவாரின் மனைவியான சுனேத்ரா பவாரை சேர்க்க வேண்டும் என்று மக்கள் மத்தியில் கோரிக்கைவிடுத்துள்ளதாக அவர் கூறினார்.

இதுகுறித்து நாங்கள் தலைமையிடம் பேசி முடிவெடுப்போம் என அஜீத் பவாரின் நெருங்கிய நம்பிக்கைக்குரியவரான ஜிர்வாள், பாராமதியில் அஜீத் பவாரின் இறுதிச் சடங்குக்குப் பிறகு செய்தியாளர்களிடம் தெரிவித்தார்.

என்சிபியின் இரண்டு குழுக்களின் இணைப்பு குறித்த கேள்விக்குப் பதிலளித்த ஜிர்வாள், அந்த இரண்டு பிரிவுகளும் ஏற்கெனவே ஒன்றாகத்தான் உள்ளன.

சிதறி இருப்பதில் எந்தப் பயனும் இல்லை. அனைவரும் ஒன்றாக இருக்க வேண்டும் என்பதை அனைவரும் உணர்ந்துள்ளனர் என்றார்.

புணே மாவட்டத்தில் உள்ள பாராமதியில் அஜீத் பவார் உள்பட ஐந்து பேர் சென்ற தனி விமானம் விபத்துக்குள்ளானதில் அனைவரும் உயிரிழந்தனர்.

முன்னதாக, 2023 ஜூலையில் அஜீத் பவார் அப்போதைய ஏக்நாத் ஷிண்டே தலைமையிலான மாநில அரசில் இணைந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

# Black box secured, probe on: Govt replies to Fadnavis's letter on Learjet 45 crash that killed Ajit Pawar

*The civil aviation ministry on Thursday replied to Maharashtra Chief Minister Devendra Fadnavis's letter seeking details of the deadly plane crash in Baramati that led to the deaths of deputy chief minister Ajit Pawar and four others a day earlier.*

*In its reply, the government said that the black box has been recovered and secured for a detailed analysis. All technical records, operational details, and facts from the accident site are under examination and will help establish the sequence of events and factors that led to the accident, it further said.*



*The Aircraft Accident Investigation Bureau (AAIB) has launched a formal investigation into the plane crash, the civil aviation ministry said, adding that it will be carried out in a thorough, transparent and time-bound manner. "The ministry is also taking cognizance of your request to consider appropriate measures to prevent recurrence," the ministry said.*

*Black Box is one of the most crucial parts of an aircraft which is considered one of the primary clues in cases of plane crashes. According to the World Aviation Flight Academy, it is a "device designed to capture and store important data during flight." Ajit Pawar, his security officer Vidip Jadhav, pilot-in-command Captain Sumit Kapur, first officer Captain Shambhavi Pathak and flight attendant Pinky Mali, died in a deadly crash of the Learjet 45 aircraft in Baramati on Wednesday morning.*

*Details of the final moments before the plane crash released by the civil aviation ministry later revealed the communication between the flight crew and the air traffic control (ATC) on the ground.*

*According to the release, the aircraft made two landing attempts in Baramati, which has an "uncontrolled" airport. The ATC there is manned by pilot cadets from two local flying schools on alternate days, an HT report earlier said.*

*While the crew initially said that the runway was not in sight, visual contact with the runway was later confirmed, following which the plane was granted clearance for landing, the civil aviation ministry release said.*

*The clearance was granted at 8:43 am and the ATC saw the plane going up in flames just a minute later, the release said.*

# U.K.'s Starmer Joins Ranks of U.S. Allies Testing China's Embrace



*British Prime Minister Keir Starmer and Chinese leader Xi Jinping moved to improve ties in Beijing on Thursday as Britain's relations with the U.S. have slipped following President Trump's tariff increases and calls for the seizure of Greenland.*

*Designing a small space may seem like a challenge but a few talented architects and interior designers regularly show to get the job done. Today, we bring you the stunning Aggarwal Residence in Mumbai's Juhu, a home reimagined by design studio Tinge by Rhea and Truptesh.*

*Spread across 1150 sq ft, this residence proves that thoughtful planning and restrained design can make compact city homes feel open, fluid, and deeply comfortable. This was a 3BHK that was converted to a 2BHK.*

*The estimated cost of the project, called Aggarwal Residence, was 9,000 per sq ft. It took eight months to finish and the result was not short of staggering. What was the brief? To create a space that feels minimal, elegant, and enduring, without appearing stark or underdone. The designers consciously avoided visual clutter, opting instead for a neutral colour palette that enhances openness and brings a sense of calm across the interiors. Subtle tonal variations, layered textures, and clean lines ensure the home feels cohesive and inviting, rather than flat or monotonous.*

*The planning of the apartment centres around a fluid relationship between the living areas, anchored by a thoughtfully designed den space. This den forms the heart of the home and acts as a crucial transitional zone one that connects the living room with the master bedroom while adapting seamlessly to multiple functions. On a daily basis, it extends the living area, serving as a relaxed lounge or informal seating zone.*

Printed by,Hiwins Printers,Published by M.APROSE, onbehalf of M.APROSE, printed at ERODE, and Published at ,1, THATTANKAADU 4TH STREET, KONGU VELAAN NAGAR, VTC PERIYASEMUR, PO: PERIA SEMUR, ERODE, TAMIL NADU - 638004 ,Editor HARI KRISHNAN M.